2002 மே 3]

வருகின்றன. மேலும், வாரத்தில் மூன்று நாட்கள் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் மூலம் தண்ணீர் அடித்து சுத்தமாகக் கழுவி விடப்படுகிறது. திருக்கோயில் முன்புள்ள சன்னதி வீதி, மண்டபங்கள் போன்றவை வாரத்தில் ஒருமுறை தண்ணீரால் கழுவி சுத்தம் செய்யப்படுகின்றன. திருக்கோயிலின் திருப்பணி வேலைகள் தொடங்கி தூய்மையாகப் பராமரிப்பதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாததால் கூடுதலாக துப்புரவுப் பணியாளர்களை தேவைக்கேற்ப தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், 27-2-2002 ஆம் தேதி, சட்டமன்ற உறுதிமொழிக் குழு, இத்திருக்கோயிலை வந்து பார்வையிட்டபோது தெரிவித்த கருத்துகளுக்கு இணங்க 7-3-2002 ஆம் தேதியன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் முசிறி சட்டமன்ற உறுப்பினர், காவல் துறை அதிகாரிகள், பேரூராட்சி நிருவாகத்தினர், திருக்கோயில் அறங்காவலர் குழு மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு திருக்கோயில் சுற்றுப்புறத் தூய்மை குறித்து செய்ய வேண்டிய பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. அதன்படி திருக்கோயில், அதனைச் சுற்றியுள்ள இடங்களைத் தூய்மையாகப் பராமரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 280, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

280—

உயர்நிலைப் பள்ளிக்கு நிலம்

***18635—திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் வட்டம், இடுவம்பாளையம் கிராமத்திலுள்ள இடும்ப குமாரசாமி ஆலயத்திற்குரிய நிலத்தில் 7 ஏக்கர் நிலத்தை அந்த கிராமத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிக்கு கிரயம் செய்து தருவதற்கான நடவடிக்கைகள் எந்நிலையில் உள்ளன?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2002 மே 3

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், இடுவம்பாளையம், அருள்மிகு இடும்ப குமாரசாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான சர்வே எண் 115-ல் உள்ள 7.06 ஏக்கர் புஞ்சை நிலத்தை அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு இலவசமாக வழங்க முருகம்பாளையம் ஊராட்சி மன்றத் தலைவரால் கேட்கப்பட்டது. ஆலய நிலத்தை அரசு உயர்நிலைப் பள்ளிக்கூடம் கட்டுவதற்கு இலவசமாக வழங்க இயலாது என்ற விவரம் தெரிவிக்கப்பட்டது. தற்போது மேற்படி திருக்கோயில் நிலத்தை அறநிலையத் துறை சட்டவிதிகளுக்கு உட்பட்டு துறை நிர்ணயிக்கும் விலையைக் கொடுக்க கல்வித் துறை இயக்குநரிடம் சம்மதம் பெறப்பட்டுள்ளது. சட்டப் பிரிவு 34-ன் கீழான விற்பனை குறித்து கோவை உதவி ஆணையரிடம் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. மாவட்ட வருவாய் அலுவலரிடம் உதவி ஆணையரால் சந்தை மதிப்பு கேட்கப்பட்டு தற்சமயம் நிலுவையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர், முருகம்பாளையம் ஊராட்சியிலுள்ள இடுவம்பாளையம் அருள்மிகு இடும்ப குமாரசாமி ஆலயத்திற்கு ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. அருகிலுள்ள பள்ளிக்கு அந்த நிலத்தை ஒதுக்க வேண்டுமென்று, அதற்குரிய கட்டணத்தைச் செலுத்துவதற்கு அப்பகுதி மக்கள் தயாராக இருக்கிறார்கள் என ஓராண்டுக்கு முன்பாகவே அதற்குரிய மனு கொடுக்கப்பட்டுள்ளது. அதிகாரிகளை அழைத்துச் சென்று இடத்தைப் பார்வையிட்டு விரைவாக முடித்துக் கொடுக்க வேண்டுமென்று நான் பலமுறை அதிகாரிகளிடம் தெரிவித்து இருக்கிறேன். வருகின்ற கல்வியாண்டில் அங்கே பள்ளி தொடங்குகின்ற விதமாக காலதாமதமின்றி அதற்குரிய பணத்தைப் பெற்றுக்கொண்டு அந்த இடத்தை அந்தப் பள்ளிக்கு விரைவாக வழங்க அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குரிய தொகையைக் கொடுப்பதற்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரவர்கள் அந்தப் பகுதியிலுள்ள ஊராட்சி மன்றத் தலைவர் மூலம் முயற்சி எடுத்து வருவார்களானால், கூடிய விரைவிலே அறநிலையத் துறை இடத்தை பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு இந்த

2002 மே 3]

அரசு கொடுப்பதற்கு முயற்சி எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 281, திரு. க. பாரமலை மற்றும் திரு. ஐ. கணேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

281—

டிப்ளமோ மருந்தாளுநர்

***6052—திரு. க. பாரமலை:**

திரு. ஐ. கணேசன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டிப்ளமோ மருந்தாளுநர் படித்து தேர்ச்சி பெற்று வேலை தேடித் தரும் அலுவலகத்தில் பதிந்து வைத்திருக்கும் நபர்களின் எண்ணிக்கை 31-3-2001 அன்று உள்ளவாறு மொத்தம் எவ்வளவு?

(ஆ) அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மருந்தாளுநர் பட்டயம் படித்து தேர்ச்சி பெற்று வேலை தேடித் தரும் அலுவலகத்தில் பதிந்து வைத்திருக்கும் நபர்களின் எண்ணிக்கை (31-3-2001-ல் உள்ளவாறு) மொத்தம் 10,752 ஆகும். இதில் ஆண்கள் 6,749 மற்றும் பெண்கள் 4,003.

(ஆ) அரசு மருத்துவமனைகளில் படுக்கை எண்ணிக்கைக்கேற்ப மருந்தாளுநர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, மருந்தாளுநர்கள் நியமிக்கப்படுகின்றனர். மருத்துவமனைகளில் படுக்கை எண்ணிக்கை அதிகரிக்கப்படும்போது அதற்கேற்றவாறு கூடுதல் மருந்தாளுநர் பணியிடங்களும் அரசால் உருவாக்கப்படுகின்றன.

முற்பகல் 10-25

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 10,752 பேர்